Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 274 /2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 4 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | தனபால் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.02.2024

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புஞ்சை புகலூார் வடக்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்னிடம் காட்டப்படும ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. என்னுடம் கிராம நிர்வாக உதவியாளர் நிர்மல் கனேஷ் கையெழுத்து செய்தார். அஜர் எதிரியை எனக்கு தெரியும். 29.09.2021 ம் தேதி வட்டாச்சியர்

s/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

அலுவலகத்தில் இருந்த எனக்கு போன்மூலம் மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்தில் ஒப்புதல் வாக்குமூலம் ் பெறுவதற்காக ஒரு வழக்கு சம்பந்தமாக என்னை உடன் இருக்கும்படி சொன்னதன்பேரில் நானும் எனது கிராம உதவியாளர் நிர்மல் கணேஷ் மதியம் சுமார் 1.30 மணியளவில் மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்திற்கு சென்றோம். ஆஜர் எதிரி முத்தையன் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் அவர் பாபு என்பவர் முத்தையனிடம் 3 லட்சம் ரூபாய் பணம் கேட்டதாகவும், 2 ரூபாய் வட்டி தருவதாகவும், கூறியதாகவும், அதற்கு முத்தையன் வட்டி தரவேண்டாம் நான் சொல்கின்ற நபருக்கு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தரும்படி சொல்லி சுவிதா என்பவரிடம் வேலைக்காக 7 லட்சம் ரூபாய் கேட்டிருப்பதாகவும், அவருக்கு வேலை வாங்கி கொடுத்தபிறகு அந்த தொகையை பங்கு போட்டுகொள்ளலாம் என்று கூறினார். பாபுவை பற்றி ஆஜர் எதிரியிடம் விசாரித்தபோது , பாபு தற்போது எங்குள்ளார் என்று தெரியாது என்று கூறினார். சுகிதா தனது வீட்டின் அருகே குடியிருப்பதாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் 2021 காலத்தில் தாந்தோனி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். நான் இதுபோலவே காவலர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பது சம்பந்தமாக சாட்சி இருந்திருக்கிறேன் . எனக்கு அன்றாட பணிகள் செய்வதற்கு கைடைரிகள் எதுவும் இல்லை. ஆஜர் எதிரி என் முன்பாக தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுததார். என்னுடைய கு.வி.ச.மு 161 ல் 7 லட்சம் ரூபாயை ஆளுக்கு பாதியாக பிரித்துகொள்வோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்வில்லை. போலிசார் சொல்லிகொடுத்துதான் நான் முதல் முறையாக அவ்வாறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு செல்லும்போதுதான் இந்த வழக்கு பற்றி தெரிந்தகொண்டேன் அதற்கு முன்பு இந்த வழக்கு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. என்னுடைய போலிசார் விசாரணையில் எதிரி சுவிதா யார் என்றே தெரியாது என்றும், தன்மீது சுவிதா புகார் கொடுத்தபின்புதான் அவரை பற்றி தெரியவந்ததாக

s/d K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,

கரூர்.

முன்னுக்கு பின் முறணாக எதிரி தானாக முன்வந்து கூறினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.  என்முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்வது தவறு என்றும், காவலர் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து செய்தகொடுத்தேன் எனறால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.